Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.77/2018

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரம்பன் | Father/Husband Name | : குருசாமி |
| Calling | : | Age | : |
| Date | : 09.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் முதல்விசாரணை</u>**

நான் மாரணிவாரியேந்தலில் வசிக்கிறேன். நான் செட்டிகுளம் கிராமத்தில் தலையாரியாக வேலை செய்து தற்போது ஓய்வுபெற்றுவிட்டேன். நாகமலை 10 வருடத்திற்கு முன்பு செட்டிகுளம் கிராம நிர்வாக அலுவலராக இருந்தார். நான் அப்போது தலையாரியாக வேலை பார்த்து வந்தேன். வழக்கின் எதிரி கதிரவனை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் மற்றும் அத்தாட்சியிலும் உள்ள 2–வது கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த கையெழுத்து எப்பொழுது செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு படிக்க தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் நாகமலை என்பவர் போடச்சொன்னதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் அ.சா.10–ஐ பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அ.சா.10–ஐ பிறழ் சாட்சியாக**

**அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் அ.சா.10-ஐ குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னிடம் தற்போது காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அழைப்பாணை, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பங்கள் ஒரே மாதிரி உள்ளது என்றால் எனது கையொப்பத்தை வேறு ஒருவர் போட்டுள்ளார்கள். போலீசார் விசாரணையில் கடந்த 08.05.13-ம் தேதி இரவு சுமார் 07.45 மணியளவில் ஊமச்சிகுளம் காவல் ஆய்வாளர் அழைத்ததன்பேரில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் காவல் நிலையம் சென்றோம். அப்போது இரவு 08.15 மணியளவில் எதிரி கதிரவன் மற்றும் அசோக்குமார் ஆகியோர்களை போலீசார் விசாரித்தபோது எதிரி கதிரவன் என்பவர் 08.15 மணியளவிலும், அசோக்குமார் என்பவர் இரவு 10.30 மணியளவிலும் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் அதன்தொடர்ச்சியாக 09.05.13ம் தேதி 03.15 மணியளவில் மதுரை கணேஷ் தியேட்டர் நியூ சிட்டி சென்டரில் நின்ற தினேஷ்குமார் என்பவரின் வீட்டிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த 3 பவுன் தங்கச்செயினை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றியபோதும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தோம் என்றும், தற்போது கையொப்பத்தை வேண்டுமென்றே அத்தாட்சியிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையொப்பம் செய்யவில்லை என வேண்டுமென்றே உண்மையை மறைத்து எதிரிக்கு சாதகமாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் கையொப்பம் செய்தது போல் தான் எனது இனிசியலுடன் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான்.